# Daily Thanthi

## Cholamandalam Investment net up 27%

**Date: 27/10/2015 | Edition: Chennai | Page: 6 | Source: Bureau | Clip size (cm): W: 13 H: 5**

India Media Monitor



# சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் நிகர லாபம் 27 சதவீதம் உயர்வு

சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு பைனான்ஸ் நிறுவனம், செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த இரண்டாவது காலாண்டில் ரூ.120 கோடி நிகர லாபம் ஈட்டியுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் ரூ.95 கோடியாக இருந்தது. ஆக, நிகர லாபம் 27 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்நிறுவனத்தின் நிகர வட்டி வருவாய் வரம்பு 7.7 சதவீதத்திலிருந்து 8.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. வழங்கிய வாகன கடன் 27 சதவீதம் உயர்ந்து ரூ.2,189 கோடியிலிருந்து ரூ.2,790 கோடியாக அதிகரித்துள்ளது. வீட்டுக்கடன் ரூ.717 கோடியிலிருந்து ரூ.770 கோடியாக உயர்ந்துள்ளது. நிறுவனத்தின் மூலதன இருப்பு விகிதம் 21 சதவீதமாக உள்ளது.